1994 மார்ச் 29]

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே எம்.ஆர்.எல்., எம்.எப்.எல்., ஐ.ஓ.சி., அசோக் லேலன்ட், பாரி, கோத்தாரி, இ.டி.பி.எஸ்., போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளின் கழிவு நீரை முறையாக அவர்கள் அரசினுடைய அனுமதி பெற்று கடலிலே விடுவதிலே எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை. ஆனால் அவர்கள் பக்கிங்காம் கால்வாயிலும், நிலத்திலும் கழிவு நீரை விடுவதால், நிலத்தடி நீர் கெட்டு, அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்கே சிரமப்படும் சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் பகுதி மக்கள் மாசு கலந்த குடிநீரை உபயோகிப்பதால், 100க்கு 33 சதவிகிதம் குழந்தைகள் உடல் ஊனமுற்ற குழந்தைகளாகப் பிறக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று மருத்துவச் சான்றுகள் கூறுகின்றன. ஆகவே தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் அந்தப் பகுதியில் இருக்கும் கழிவு நீரை கடலில் விடுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை ஏற்று, உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 135, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

135—

செங்கம் பகுதியில் தனி வனக்கோட்டம் அமைத்தல்

21372—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம், புதுப்பாளையம், சாத்தனூர் அணை, கடலாடி, கலசப்பாக்கம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி தனி வனக்கோட்டம் அமைத்திடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது போன்ற திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம், திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்ட வனக் கோட்டத்திற்குள் அமைந்துள்ளது. ஆனால் செங்கம் ரேன்ஞ்ச் திருப்பூர்

வனக் கோட்டத்தில் அமைந்துள்ளது. நிர்வாக ரீதியாக மட்டுமல்ல, ஒருவேளை ஜவ்வாது மலை வன வளப் பாதுகாப்புக்காகவும், சில நிதி பெற வேண்டுமென்றாலும் திருப்பூரிலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து, நிதி உதவி பெறும் நிலைமை இருக்கிறது. நிர்வாகச் சிக்கலும் இதில் இருக்கின்ற காரணத்தினால்தான், செங்கம், புதுப்பாளையம், சாத்தனூர் அணை, கடலாடி, கலசப்பாக்கம் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து, தனியாக ஒரு கோட்டம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். எனவே இதை மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பகுதிகள் இப்போது திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் அமைந்திருக்கின்றன. 1932-ல் திருப்பத்தூர் வனக்கோட்டமும் வேலூர் வனக்கோட்டமும் உருவாக்கப்பட்டன. எனவே அதற்குப் பிறகு சுமார் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு ஆற்றல் மிக்க தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்தப் பகுதியின் தேவையை உணர்ந்தும் வன வளத்தைப் பெருக்குகிற விதமாகவும், 1-4-1992-ல் புதிதாக ஒரு வனக்கோட்டத்தைத் திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்டு உருவாக்கியிருக்கிறார்கள். எனவே இப்போது நிர்வாகச் சிக்கல்கள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டம் ஐந்து ரேஞ்சுகளை உள்ளடக்கியது. அதேபோல திருப்பத்தூர் கோட்டம் ஏழு ரேஞ்சுகளை உள்ளடக்கியது. ஆனால் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் ஒன்பது ரேஞ்சுகள் உள்ளடங்கி இருக்கின்றன. ஆரணியைத் தலைநகராகக் கொண்டு தனியாகக் கோட்டம் தொடங்க உத்தேசம் இருக்கிற காரணத்தால், அப்போதாவது செங்கம் ரேஞ்சை திருவண்ணாமலைக் கோட்டத்தில் இணைக்க அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஞ்சுகள் இருந்தாலும் கூட, நிர்வாகச் சிக்கல்கள் என்பது ரேஞ்சுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. பாதுகாப்பு, டெவலப்மென்ட் இதனுடைய அடிப்படையில் உருவாக்கப் பட்டிருக்கின்றன. எனவே, இந்தத் தேவையை உணர்ந்தே புதிதாக—மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்—60 ஆண்டுகளுக்குப் பிறகு, வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலகட்டத்தில் உருவாக்கப்பட்டதற்குப் பின்னர்,

60 ஆண்டுகளுக்குப் பிறகு, தேவையை உணர்ந்து செய்திருக்கிறார்கள். எனவே, இப்போது அங்கே ஒரு கோட்டம் புதிதாக அமைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று இந்தத் துறை கருதுகிறது. மாறாக செங்கத்தைத் தலைநகராக வைத்து ஒரு வனச்சரகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, திரு எஸ்.எம். கிருஷ்ணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

136—

அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த ஆசிரியர்களை நிரந்தரம் செய்தல்.

10915—திரு. எஸ். எம். கிருஷ்ணன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த முறையில் பணியாற்றும் சுமார் 360 ஆசிரியர்களை நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு அலுவலர் நலனில் மிகுந்த அக்கறை காட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அனுமதியோடு, 26-3-1993 முதல் அரசுக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களை முறையான பணிக்கு உட்கொணர அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 137, திரு. எச்.எம். ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

137—

ஊட்டி அரசினர் கலைக்கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்குதல்.

21193—திரு. எச்.எம். ராஜு :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் எம்.ஏ. வரலாறு, ஆங்கிலம், எம்.காம்., எம்.எஸ்.சி., கணிதம், விலங்கியல் ஆகிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.